82—

ஆரம்பச் சுகாதார நிலையம்.

*167 திரு. ஏ.டி. செல்லசாமி :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

ஒட்டன்சத்திரம் தொகுதியில் தொப்பம்பட்டி, இடையகோட்டை ஆகிய இடங்களில் ஆரம்பச் சுகாதார நிலையம் துவக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஒட்டன்சத்திரம் தொகுதியில் இடையக்கோட்டை என்னும் கிராமத்தில் ஏற்கெனவே ஒரு ஆரம்பச் சுகாதார நிலையம் இயங்கி வருகிறது. தொப்பம்பட்டியில் புதிதாக ஆரம்பச் சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறு ஏதுமில்லை.

முற்பகல் 9.55

திரு. ஏ.டி. செல்லசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொப்பம்பட்டியை ஒட்டி 40 கிராமங்கள் இருக்கின்றன. மேலும் தொப்பம்பட்டியில் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் உள்ளது. எனவே அலுவல் சம்பந்தமாகவும் பல்வேறு பணிகளுக்காகவும் மக்கள் அங்கே செல்ல வேண்டிய சூழ்நிலை உள்ளதால், அங்கே ஆரம்பச் சுகாதார நிலையம் கண்டிப்பாகத் தேவைப்படுகிறது. மற்றும் பெரியார், சேலம், தருமபுரி மாவட்டங்களிலிருந்து பழனி திருக்கோவிலுக்கு நடைப் பயணமாக வரும் பக்தர்கள் தொப்பம்பட்டி வழியாகத்தான் வர வேண்டும். எனவே தொப்பம்பட்டியில் ஆரம்பச் சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் 1,11,800 மக்கள் தொகை இருக்கிறதென்று கணக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. அரசாங்கத்தினுடைய இலக்குப்படி 30,000 (பர்களுக்கு ஒரு ஆரம்பச் சுகாதார நிலையம் என்ற இலக்கை நாம் வைத்திருக்கிறோம். அதன்படி பார்த்தால் இந்த ஒன்றியத்திலே 4 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் ஏற்கெனவே இயங்கி வருகிற காரணத்தாலேதான் தொப்பம்பட்டியிலே அப்படிப்பட்ட சாத்தியக்கூறு இல்லை என்று நான் சொன்னேன். ஆனால் இன்றைக்கு அவர்கள் தொப்பம்பட்டி பற்றி தனிப்பட்ட முறையிலே ஜனத்தொகை பற்றியும் அங்கே மக்கள் அதிகமாக வந்து போகிறார்கள் என்பது பற்றியும் சொல்கிற காரணத்தால், இந்த நான்கு ஆரம்பச் சுகாதார நிலையங்கள் இருப்பது போதுமா என்பதை தனிப்பட்ட முறையிலே ஆய்வு செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

1991 செப்டம்பர் 26]

திரு. ஏ. டி. செல்லசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியான ஒட்டன்சத்திரம் தொகுதியில் ஒட்டன்சத்திரத்தில் ஆரம்பச் சுகாதார நிலையம் இருந்தது. இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் அது அரசு மருத்துவமனையாக மாற்றப்பட்டது. பின்பு ஒட்டன்சத்திரத்தில் இருந்த அரசு மருத்துவமனையை முன்பு இருந்த தி.மு.க. அரசு ஆரம்பச் சுகாதார நிலையமாக மாற்றியது. 4 இலட்சம் பேர்களுக்கு மேல் மக்கள் தொகை கொண்ட என்னுடைய தொகுதியில் அரசு மருத்துவமனை இல்லாத நிலையில்......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: செல்லசாமி, இது தொப்பம்பட்டி, இடையக்கோட்டையில் ஆரம்பச் சுகாதார நிலையம் ஆரம்பிப்பது பற்றியது. இன்னொரு ஊர் பற்றிக் கேட்டால், அமைச்சரவர்களிடம் பதில் இராது. இந்த இரண்டு ஊர்கள் பற்றிக் கேட்கிறீர்களா?

வினா எண் 83. திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

83—

மருத்துவக் கல்லூரியில் மாணவர் சேர்க்கை எண்ணிக்கையை அதிகரித்தல்.

*251 திரு. ம. சின்னசாமி :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மருத்துவக் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை எண்ணிக்கையை அதிகரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மருத்துவக் கல்லூரிகளில் சேர அதிக எண்ணிக்கையில் மாணவர்கள் ஆண்டுதோறும் விண்ணப்பம் செய்கிறார்கள். குறைந்த அளவில்தான் மாணவர்களை இது வரை சேர்த்து வருகிறோம். எனவே கூடுதல் இடங்களை ஒதுக்க வேண்டும் என்ற கோரிக்கை மாணவர்களிடமிருந்து வந்த வண்ணம் உள்ளது.

ஆனால் மருத்துவர்களின் எண்ணிக்கையை கூடுதலாக்க வேண்டிய தேவை உள்ளதா, ஏற்கெனவே உள்ள கல்லூரிகளில் இடங்களை அதிகரிக்க போதிய வசதிகள் உள்ளனவா, இந்திய மருத்துவக் கழகம் அதற்கு ஒப்புதலைத் தருமா போன்ற கருத்துக்களை அடிப்படையாக வைத்து ஆய்வு செய்து அரசு நடவடிக்கை எடுக்க உள்ளது.

TRUTH ALONE TRIUMPHS